RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-357 | 24 டிசம்பர் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ஏஐ துறை ஆலோசகராக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனை நியமித்த ட்ரம்ப்

வாஷிங்டன், டிச.24



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனை அமெரிக்க ஏஐ தொழில்நுட்பத் துறை கொள்கை ஆலோசகராக நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளார் அமெரிக்க அதிபராக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப்.

வெள்ளை மாளிகையின் அறிவியல் தொழிநுட்ப கொள்கை துறையின் ஏஐ பிரிவின் மூத்த கொள்கை ஆலோசகராக ஸ்ரீராம் கிருஷ்ணன் செயல்படுவார் என்று ட்ரம்ப் அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணன் ஏற்கெனவே மைக்ரோசாஃப்ட், ட்விட்டர், யாஹூ, பேஸ்புக், ஸ்நாப் போன்ற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர். அவர் டேவிட் ஓ சாக்ஸுடன் இணைந்து பணிபுரிவார். டேவிட் சேக்ஸ் வெள்ளை மாளிகை ஏஐ, கிரிப்டோ துறை தலைவராக செயல்படுவார்.

புதிய பதவி குறித்து ஸ்ரீரம் கிருஷ்ணன், “ஏஐ துறையில் அமெரிக்காவை தொடர்ந்து முன்னிலைப்படுத்துவதை உறுதி செய்து, நாட்டிற்கு சேவையாற்ற இருப்பதை பெருமையாகக் கருதுகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார். ஸ்ரீராம் கிருஷ்ணன் சென்னையில் பிறந்து, வளர்ந்து, படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப் குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்: முன்னதாக, ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் (எஃப்பிஐ திமிமி) இயக்குநராக தனக்கு நெருங்கிய நம்பிக்கையாளரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த காஷ் பட்டேலை ட்ரம்ப் நியமித்தார். உளவுத்துறை இயக்குநராக துளசி கப்பார்டை தேர்வு செய்தார். இப்போது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனை அமெரிக்க ஏஐ தொழில்நுட்பத் துறை கொள்கை ஆலோசகராக நியமித்துள்ளார்.

## காசாவுக்குள் மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதைத் தடுக்கும் இஸ்ரேல்! ஆக்ஸ்ஃபாம் அதிர்ச்சி அறிக்கை

காசா, டிச.24



அக்டோபரில் இருந்து காசாவுக்கு 12 லாரிகளில் மட்டுமே உணவு, தண்ணீர் மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஆக்ஸ்ஃபாம் அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், “வடக்கு காசாவுக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட 34 லாரிகளில் கடந்த இரண்டரை மாதத்தில் வெறும் 12 லாரிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் ராணுவம் வேண்டுமென்றே காட்டிய கெடுபிடிகளால் உணவு, தண்ணீரை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது” என்று குறிப்பிட்டுள்ளது. இத்தகைய கெடுபிடிகளால் காசாவில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் ஆக்ஸ்ஃபாம் சுட்டிக் காட்டுகிறது.

மேலும், “மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் ராணுவம் இரக்கமின்றி நடந்து கொள்கிறது. உணவு, தண்ணீர் லாரிகளை எடுத்துச் செல்ல அத்தனை அனுமதியும் கிடைத்த பின்னரும் கூட ஜபாலியாவில் தேவையே இன்றி லாரிகளை தடுத்து நிறுத்துகிறது. மேலும், ராணுவப் பகுதிகளில் உணவு, தண்ணீரை இறக்கி வைக்க ஓட்டுநர்களை நிர்பந்திக்கிறது. கடந்த மாதம் மட்டும் 11 லாரிகள் இவ்வாறாக நிறுத்தி வைக்கப்பட்டன.” என்று ஆக்ஸ்ஃபாம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேபோல், நியூயார்க்கை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இஸ்ரேல் அதிகாரிகள் திட்டுமிட்டு காசாவுக்கு உணவு, தண்ணீர் கிடைப்பதைத் தடுத்து வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் அங்கே உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கும்” என்று கூறியுள்ளது. டிசம்பர் 19 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் அந்த அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

45 ஆயிரத்தைக் கடந்த உயிர்ப்பலி: கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் காசா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது இன்னுயிரை துறந்து வருகின்றனர். ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓய மாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது. இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 45,220க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

UNHCR கவலை: இதற்கிடையில் தெற்கு காசாவின் அல் மவாஸியில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்ட இடத்தைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 50க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதனால் இஸ்ரேல் காசா மோதல் சற்றும் தீவிரம் குறையாமல் தொடர்ந்து வருவதாக ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) கவலை தெரிவித்துள்ளது.

## மெரினாவில் களைகட்டிய உணவு திருவிழா அலைமோதிய மக்கள் கூட்டம்

சென்னை, டிச.24



சென்னை மெரினா கடற்கரையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுயஉதவி குழுக்களை ஊக்குவிக்கவும், பாரம்பரிய உணவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் உணவு திருவிழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 20ம் தேதி தொடங்கி வைத்தார்.

உணவு திருவிழாவை ஆர்வத்துடன் காணவும், ஆசையுடன் உணவு உண்டு மகிழவும் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். கோவை கொங்கு மட்டன் பிரியாணி, கரூர் நாட்டுக்கோழி பிரியாணி, நாமக்கல் பள்ளிப்பாளையம் சிக்கன், ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, சிவகங்கை மட்டன் உப்புக்கறி, மதுரை கறி தோசை, நாமக்கல் முடவாட்டு கிழங்கு சூப், கன்னியாகுமரி பழம்பொறி, குதிரை வாலி புலாவ், சிந்தாமணி சிக்கன், பருப்பு போளி, தேங்காய் போளி, களிகருவாட்டு குழம்பு, ராகி இட்லி, நெய் சாதம் மட்டன் கிரேவி போன்ற உணவுகளை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி உண்டு மகிழ்ந்தனர்.

சனி, ஞாயிறு விடுமுறை என்பதால் உணவு திருவிழாவில் கடந்த 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை குடும்பம் குடும்பமாக மெரினாவுக்கு வருகை தந்தனர்.

கவுன்ட்டர்களில் கூட்டம் நிரம்பி வழிந்தன. மெரினாவை ஒட்டியுள்ள காமராஜர் சாலையில் விவேகானந்தர் இல்லம் முதல் உழைப்பாளர் சிலை வரை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கடந்த 3 நாட்களில் மட்டும் ரூ.50 லட்சத்துக்கு உணவு வகைகள் விற்பனையானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உணவு திருவிழாவுக்கு வந்த வியாசர்பாடி காமாட்சி கூறும்போது, ‘‘அனைத்து மாவட்டங்களின் உணவு வகைகளும் ஒரே இடத்தில் கிடைப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதுவும் குழந்தைகள் இதுவரை சாப்பிடாத உணவுகள் கிடைப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரம், கூட்டம் அதிகமாக இருப்பதால் பணம் செலுத்தும் கவுன்ட்டர்களில் நீண்ட நேரம் நிற்க வேண்டியுள்ளது. கவுன்ட்டர்களை அதிகப்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும்’’ என்றார்.

‘‘வீட்டில் சாப்பிடும் உணவுகளைவிட வித்தியாசமான உணவுகள் கிடைத்தன. சுவையும் அருமையாக இருந்தது. செம்பருத்தி ஜூஸ் எனக்கு மிகவும் பிடித்திருந்தது’’ என வியாசர்பாடி தன்ஸ்ரீ கூறினார். “உணவுகள் நன்றாக இருந்தாலும், ஏற்பாடுகள் போதவில்லை. கவுன்ட்டர்களில் நின்று வாங்கிச் செல்லும் உணவுகளை உட்கார்ந்து சாப்பிட இருக்கைகள் இல்லை.

முதியவர்கள், குழந்தைகளால் அதிகநேரம் நின்றுகொண்டு சாப்பிட முடியவில்லை’’ என்று வேளச்சேரி நாகராஜன் தெரிவித்தார். பார்வையாளர்கள் மதியம் 12.30 முதல் இரவு 8.30 வரை பங்கேற்கலாம். அனுமதி இலவசம். மெரினா உணவு திருவிழா நாளை (டிசம்பர் 24) நிறைவடைகிறது.

## 7வது முறை ஆட்சி அமைக்க இலக்கு, அமித் ஷாவுக்கு கண்டனம்... திமுக செயற்குழுவின் முக்கிய தீர்மானங்கள்

சென்னை, டிச.24




அம்பேத்கரை அவதூறு செய்ததாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு திமுக செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும், 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற உழைப்பது, ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு எதிர்ப்பு என்பன உள்ளிட்ட 12 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமையகத்தில் கட்சித் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக தலைமை செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணைபொதுச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என 800க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் புத்தகம் வழங்கப்பட்டது.

சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்ற கூட்டத்தில் 35க்கும் மேற்பட்டோர் கருத்து தெரிவித்தனர். குறிப்பாக ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுக போட்டியிட வேண்டும் என நிர்வாகிகள் விருப்பம் தெரிவித்தனர். கூட்டத்தில், பொதுச்செயலாளர் துரைமுருகன் பேசும் போது, “கூட்டணியை கட்டமைப்பதில் திமுக தலைவருக்கு நிகர் யாருமில்லை. நாம் களத்தில் கவனம் செலுத்துவோம்” என்றார்.

துணை பொதுச்செயலாளர் கனிமொழி பேசும்போது, “தமிழக அரசுக்கு ஆதரவான சூழலால் 50% வாக்குகள் திமுக கூட்டணிக்கு கிடைக்கும். பெண்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வரும் பணியை மகளிரணி கவனித்துக் கொள்ளும்” என்றார். துணை முதல்வர் உதயநிதி பேசும்போது, “கூட்டணி நாளுக்கு நாள் வலுவாகிறது. சமூக வலைதளங்களில் திமுகவை வலுப்படுத்த வேண்டும். 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்” என்றார்.

நிறைவாக முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: சட்டப்பேரவைத் தேர்தல் களத்தை எதிர்கொள்ள ஒன்றரை ஆண்டுகளே உள்ளது. ஏழாவது முறை ஆட்சி அமைக்க வேண்டும் என்பது தான் இலக்கு. சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெல்லும். இந்த நம்பிக்கைக்கு ஆணிவேர் கட்சியினர்தான். தமிழகம் என்னும் எல்லையோடு அல்லாமல் இந்தியா முழுவதும் ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பை ஏற்று பணியாற்றுகிறோம்.

இதற்கிடையே, காற்றில் கணக்கு போட்டு கற்பனையில கோட்டை கட்டும் பழனிசாமி, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அதிமுகவின் வாக்கு 1 சதவீதம் உயர்ந்திருக்கிறது என உளறி இருக்கிறார். அவர் சொன்ன கணக்கை அறிவுள்ள அதிமுககாரர்களே கேட்டு சிரிக்கிறார்கள். பழனிசாமி டங்ஸ்டன் சுரங்க அனுமதிக்கு எதிராக பாஜகவை கண்டித்தாரா? அம்பேத்கரை கொச்சைப்படுத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு எதிராக பேசினாரா? பிரதமரை எதிர்க்கும் துணிவு அவருக்கு இருக்கிறதா?

திமுக ஆட்சி மீது பெண்களுக்கு பெரும் நம்பிக்கை இருக்கிறது. அவற்றை ஆதரவு வாக்குகளாக மாற்ற வேண்டும். திமுக நூற்றாண்டு காணும் போதும் ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

முன்னதாக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: அம்பேத்கரை அவதூறு செய்த மத்திய உள்துறை அமைச்சர், ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா, நிதி வழங்குவதில் மத்திய அரசின் பாரபட்ச அணுகுமுறை உள்ளிட்டவற்றுக்கு கடும் கண்டனம். தமிழக மக்களை வஞ்சிக்கும் மத்திய அரசு, பேரிடர் நிதி என்பது பாஜக கட்சி நிதி அல்ல என்பதை உணர்ந்து வழங்க வேண்டும். டங்க்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் மத்திய பாஜக அரசுக்கும், கைகோர்த்து திட்டத்தை ஆதரித்து தமிழகத்துக்கு துரோகம் செய்து கபடநாடகமாடும் அதிமுகவுக்கும் கண்டனம். கேரளாவில் நதிநீர் பிரச்சினை குறித்து பேசி திரும்பிய முதல்வருக்கு பாராட்டு. கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அமைக்கப்பட்ட வெள்ளிவிழாவை முன்னெடுக்க வேண்டும். பேரவைத் தேர்தலில் திமுக 200 இடங்களில் ஏன் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவதை தொண்டர்கள் உறுதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## “இதுவரை 10 லட்சம் இளைஞர்களுக்கு அரசு வேலை” 71,000 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கிய மோடி பெருமிதம்

புது டெல்லி, டிச.24



கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளைத் தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசுப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 71 ஆயிரம் பேருக்கு நியமன ஆணைகளை பிரதமர் மோடி இன்று (டிச.23) வழங்கினார். மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு, பிரதமர் மோடி பணி நியமன உத்தரவுகளை வழங்கி வருகிறார். அந்த வகையில், இன்று 71 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு, காணொலி காட்சி வாயிலாக பணிநியமன ஆணைகளை பிரதமர் மோடி வழங்கினார்.

ரோஜ்கர் மோளாவில் பங்கேற்ற பிரதமர் மோடி கூறியது: “நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல, இளைஞர்களின் திறமைகளை வளர்ப்பது அவசியம். இதற்கான பொறுப்பு நாட்டின் கல்வித் துறையிடம் உள்ளது. புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப ஒரு நவீன கல்வி முறை இங்கு அவசியம். அதனை நாடு தற்போது உணர்ந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் மூலம், நாடு இப்போது அந்த திசையில் நகர்ந் துள்ளது. முன்னதாக, பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாக, கல்வி முறை பெரும்பாலும் மாணவர்களுக்கு சுமையாகவே மாறியிருந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளை தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஆள்சேர்ப்பு செயல்முறை நடத்தப்படுகிறது. முன்னதாக, கிராமப்புற, தலித், பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி சமூகங்களை சேர்ந்த இளைஞர்களுக்கு மொழி பெரும் தடையாக இருந்தது.

ஆனால் இப்போது, தாய் மொழியில் பாடங் களை கற்பிக்கவும், தேர்வு களை நடத்தவும் கொள்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும், 13 மொழிகளில் தேர்வுகளை எழுதுவதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளோம். கிட்டத்தட்ட, 50,000 இளைஞர்கள் மத்திய ஆயுதப் படையில் சேர்வதற்கான பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். அரசாங்கத்தின் கொள்கைகள் தற்போது கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன.

பெரும்பாலான இளைஞர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கிடைத்துள்ளது. அவர்கள் விரும்பிய பணிகளையும் மேற்கொள்ள வாய்ப்பு உருவாகியுள்ளது. இன்று ஆயிரக்கணக்கான பெண்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டது. உங்கள் வெற்றி மற்ற பெண்களுக்கு ஊக்கமளிக்கும். பெண்களை எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெறச் செய்வதே எங்கள் முயற்சி. பெண்களைத் தடுக்கும் ஒவ்வொரு தடையையும் அகற்ற எங்கள் அரசாங்கம் உழைத்து வருகிறது.

பெண்களுக்கு 26 வார மகப்பேறு விடுப்பு வழங்குவதற்கான அரசின் முடிவு. அவர்களின் தொழில் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியுள்ளது. எங்கள் அரசாங்கம் 30 கோடி பெண்களுக்கு ஜன்தன் வங்கி கணக்குகளைத் திறக்க வழிவகை செய்துள்ளது. இது, அவர்கள் அரசாங்கத் திட்டங்களிலிருந்து நேரடியாகப் பயனடைவதை உறுதி செய்துள்ளது” என்றார்.

## “நல்லகண்ணு நூற்றாண்டு விழாவை டிச.29ல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்” பழ.நெடுமாறன் தகவல்

சென்னை, டிச.24



இந்திய கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு நூற்றாண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் வரும் 29ம் தேதி காலை 9 மணிக்கு தொடங்குகிறது. இந்த விழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார் என உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில், இந்த விழாவின் மின் அழைப் பிதழை திரைப்படத் தயாரிப் பாளர் கலைப்புலி தாணு வெளியிட, உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் பெற்றுக் கொண்டார். பழ. நெடுமாறன் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “தமிழ்நாட்டில் கடந்த தலைமுறையில் மாபெரும் தலைவர்கள் பலர் நம்மிடையே வாழ்ந்திருந்தாலும், அவர்கள் வாழும் காலத்திலேயே எவருக்கும் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டதில்லை.

பொது வாழ்வில் தியாகம், தொண்டு, நேர்மை, எளிமை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக இந்த தலைமுறையைச் சேர்ந்தவராக திகழ்பவர் நல்லகண்ணு. அவர் வாழும் காலத்திலேயே நாமும் வாழ்கிறோம் என்பதுதான் நமக்குள்ள பெருமையாகும். மிக இளம் வயதிலேயே தன்னை மக்கள் தொண்டுக்கு ஒப்படைத்துக் கொண்டு போராட்ட வாழ்வை விரும்பி தேர்ந்தெடுத்து கட்சியைக் கடந்து அனைவராலும் மதித்து போற்றப்படும் பெருமைக்குரிய தலைவர் நல்லகண்ணு.

தமிழக அரசியலில் ஒப்பற்ற தலைவரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவருமான இரா.நல்லகண்ணு நூற்றாண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் வரும் 29ம் தேதி காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது. இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று நல்லகண்ணுவுக்கு சிறப்பு செய்தும், கவிதை நூலை வெளியிட்டும் விழாவைத் தொடங்கி வைத்தும் சிறப்புரையாற்றுகிறார். அதையடுத்து பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் நல்லகண்ணுவை பாராட்டிப் பேசுகின்றனர்.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை தர்மலிங்கம் அறவழித் தொண்டு கல்வி அறக்கட்டளை சார்பில் த.மணிவண்ணன் செய்துள்ளார்” என்று பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

மாலை தந்தி



## பட்லூர் நால்ரோடு பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகள் நிறைவு





திருப்பூர், டிச.24

திருப்பூர் பவானி உட்கோட்டம் மாநில நெடுஞ்சாலைத்துறை சார்பில் பட்லூர் நால்ரோடு பகுதியில் நடைபெற்ற சாலை மேம்பாட்டு பணி நிறைவு பெற்றது. பவானி (நெ) க(ம)ப உட்கோட்டம், பட்லூர் நால் ரோட்டில் மாநில நெடுஞ்சாலை யான அந்தியூர் அம்மா பேட்டை கி.மீ. 3054ல் இந்த நிதியாண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டுத்தின்கீழ் சாலையின் ஓடுதளத்தை மேம்பாடு செய்தல் பணி ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு நிறைவு பெற்றது. மேற்கண்ட பணியில் சாலையின் இருபுறங்களிலும் எதிர்வரும் வாகனங்கள் தெளிவாக தெரியும் வண்ணம் புதர்கள் அகற்றப்பட்டு நொடிகள் சீர்செய்யப்பட்டு தார்சாலை புதுப்பிக்கும் பணியானது மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அடிக்கடி விபத்து நடைபெறும் இடங்கள் கண்டறியப்பட்டு வாகன ஓட்டிகள் வேகத்தை குறைத்து விபத்தை தடுக்கும் வகையில்அந்தியூர் அம்மாபேட்டை சாலையில் உள்ள பட்லூர் நால்ரோடு சாலைசந்திப்பில் புதிதாக இரண்டு வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதிகளில் வாகன விபத்தானது பெருமளவு குறைந்து பொதுமக்கள் உரிய பயனடைவார்கள்.

மேற்படி தார்சாலை அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளால் துரிதமாக முடிக்கப்பட்டு திருப்பூர் தரக்கட்டுப்பாடு கோட்டப் பொறியாளர் கிருஷ்ண மூர்த்தி மற்றும் உதவிக் கோட்டப்பொறியாளர் சாந்தி ஆகியோர்களால் சாலையின் தரம் ஆய்வு செய்யப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## பொழிச்சலூர் பகுதி தமிழக வெற்றி கழகம் சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்



பொழிச்சலூர், டிச24

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பொழிச்சலூர் பகுதி தமிழக வெற்றி கழகம் சார்பில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் மாவட்ட தலைமை பொலிச்சலூர் ஜே.மணி ஜெயமோகன் மாவட்ட தலைமை ஏற்பாட்டில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் வீ.குமார் பங்கேற்று கண் சிகிச்சையின் முகாமை துவக்கி வைத்து 75க்கும் மேற்பட்டோருக்கு இலவச கண்ணாடியை வழங்கிசிறப்பித்தனர், நடைபெற்ற இலவச கண் சிகிச்சையில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்,

உடன் நிகழ்ச்சியில் மாவட்ட கவுரவ தலைவர் சங்கர், பல்லாவரம் தம்பி ராஜா, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ராஜகுமாரன், தொகுதி தலைவர் சுறா ரவி, தொகுதி செயலாளர் அரவிந்த், தொகுதி துணை தலைவர் பார்த்திபன், பரங்கிமலை ஒன்றியம் மணிகண்டன், தொகுதி வழக்கறிஞர் பிரிவு ரபேக்கா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ்.ஜான், பல்லாவரம் பகுதி தேசக்குமார், கார்த்திக், பொழிச்சலூர் பகுதி தலைமை நிர்வாகிகள் பொழிச்சலூர் பொருளாளர் சந்துரு , பிரதீப் குமார், வினோத்குமார், கே.எஸ்.ஆர்.சுரேஷ், அருண்குமார், சுந்தர், மகளிர் அணி நிர்வாகிகள் இந்துமதி, நந்தினி உட்பட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருச்சிராப்பள்ளிமக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பின் அமைப்பின் ஆலோசனை கூட்டம்



திருச்சி, டிச.24

திருச்சிராப்பள்ளி மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பின் அமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராஜேஷ் இன் ஆலோசனையின் படி நிறுவன பொதுச் செயலாளர் வீட்டில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தாலுக்கா தெற்கு மலையில் மழையின் காரணமாக வீடுகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் உணவிக்கு கஷ்டப்படும் குடும்பத்தினர்கள் நம் அமைப்பிடம் உதவி கேட்டுள்ளார்கள் அமைப்பின் ஆலோசனை மீட்டிங் அவர்களுக்கு நம் அமைப்பின் சார்பில் நம்மளால் முடிந்த உணவுப் பொருள்கள் வழங்கலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டன இதில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி மாநில ஆலோசகர் ராமன் மாநிலத் துணை ஆலோசகர் பெஞ்சமின் மாநில மகளிர் அணி தலைவர் சுபா மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி திருச்சி மாவட்ட தலைவர் ராஜ்குமார் திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்டத் துணைத் தலைவர் சந்திரா திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி செயலாளர் ரேவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணை செயலாளர் யாஸ்மின் திருச்சி மாவட்ட மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, தனியார் கல்லூரி, அண்ணா கலை அரங்கில் (ஸ்பரஸ்) இந்தியாவின் முப்படையை சார்ந்த வீரர்களுக்கு குறைதீர்க்கும், ப்படா ஸாப்லோங்கா தர்பார் கூட்டம், ஸ்பரஸ் திட்டத்தின் கீழ் முப்படை இராணுவம், கடற்படை, விமானப்படை ஓய்வூதியதாரர்களுக்கு வருடாந்திர உயிர் சான்று அடையாளம் காணவும் அவர்களின் பல்வேறு ஓய்வூதியம் சார்ந்த குறைகளை தீர்க்கவும் ஒரு மாபெரும் ஸ்பரஸ் விளக்க மற்றும் குறைதீர்க்கும் முகாம் சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் அலுவலகம், தஷின் பாரத் இராணுவ தலைமை அலுவலகம் மற்றும் வேலூர் மாவட்டம் முன்னாள் படை வீரர்கள் நலச் சங்கம் இணைந்து வேலூர் (தனியார்) தொழில்நுட்ப பல்கலைக்கழக அண்ணா கலை அரங்கத்தில் கடந்த சனிக்கிழமை (டிச21) நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவி பங்கேற்று சிறப்புரையாற்றி நல திட்டங்களை வழங்கினார்.

## தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி



தென்காசி டிச24

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (டிச 21) அன்று நடைபெற்ற அரசு பள்ளிமாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர். மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியருடன் தேநீர் விருந்தில் கலந்து கொண்டு கலந்துரையாடும் சிறந்த வாய்ப்பை பாவூர்சத்திரம் ஔவையார் அரசு மேல்நிலைப்பள்ளி அனு பிரபா (12), பாரதி (10) தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முத்து ஸ்ரீதர் (11) ,ஜோ ஜோஸ்வின்(10) மஞ்சம்மாள் மேல்நிலைப்பள்ளி சிவமுத்துலட்சுமி (12), அபிநயா (10), புல்லுக்காட்டுவலசை அரசு மேல்நிலைப்பள்ளி தனஸ்ரீ(12), பிரின்ஸ் ராஜதுரை (12) மேலகரம் அரசு மேல் நிலைப்பள்ளி மணிகண்ட பிரபு (12) பிரியதர்ஷினி (10), சுந்தரபாண்டியபுரம் இலக்கியா (12), மதுமித்ரா (12), செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வேனு கிருஷ்ணா (11), முகமத் ரஷீக் (9), வேதம் புதூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஆதிரா ஸ்ரீமுகி (10),ஜைனாப்(10), இடைகால் அரசு உயர்நிலைப் பள்ளிகாவியா (9), சத்தியமுத்து (10) கடையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பிரியங்கா (12), கோமதி (12) ஆகிய அரசு பள்ளி மாணவ மாணவியர் 20 பேர் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சியர் கலந்துரையாடியதாவது,

மாணவர் மாணவியர் மாவட்ட ஆட்சியர் உடன் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். தங்களது கல்வி பயணம் எதிர்கால திட்டங்கள், விருப்பங்கள், சமூகம் குறித்தான தங்களது பார்வைகுறித்தும் பகிர்ந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், முன்னேற்ற சிந்தனை ,விடாமுயற்சி ஆகிய பண்புகளில் எவ்வாறு தங்களை ஈடுபடுத்திக் கொள்வது என்பது பற்றிய ஆலோசனை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் பணிக்கு கடந்து வந்த பாதைகளை மாணவர்களின் ஆர்வம் கொள்ளும் அளவில் விளக்கம் அளித்தார்.

நேரத்தை சரியாக நிர்வகிக்கவும், குறிக்கோள்கள் அமைக்கவும், தவறுகளைப் புரிந்து கற்றுக்கொள்வது முக்கியம். உங்களை ஊக்கப்படுத்தும் மற்றும் உங்களுடன் உழைக்கும் நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள். கேள்வி கேட்க பயப்பட வேண்டாம்; அடிக்கடி உங்கள் ஆசிரியர்களிடம் அல்லது நண்பர்களிடம் சந்தேகங்களை தீர்த்து கொள்ளுங்கள்.ஒவ்வொரு பாடத்தையும் அடிப்படை இருந்து புரிந்து கொள்ள முயற்சிக்கவும். முக்கியமான பாடங்கள் மற்றும் செயல்களுக்காக நேரம் ஒதுக்குங்கள்.சிறிய குறிக்கோள்களுடன் தொடங்கவும். குறிக்கோள்களை அடைந்த பிறகு தங்களை ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.இவை உங்கள் வளர்ச்சிக்கு மட்டும் இல்லாமல், ஒரு சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்கவும் உதவும். பாடப்புத்தகங்களுடன் மட்டுமல்லாமல் கூடுதல் தகவல்களை புத்தகங்கள், இணையம், மற்றும் மனித உறவு செயல்பாடுகள் மூலம் கண்டறியுங்கள் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

கல்வி கற்கும்போது நண்பர்களுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்து கற்கவும். ஒருவரது அறிவு மற்றவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். கல்வி, நட்பு, விளையாட்டு அவற்றை எவ்வாறு தினசரி வாழ்வில் சமநிலைப்படுத்தி கையாள்வது போன்ற மாணவர்களின் வினாக்களுக்கு விடை அளித்தார். மாணவர்கள் மாவட்ட ஆட்சிப் பணி மற்றும் அலுவலக நடைமுறைகள் சார்ந்தும் தங்களுக்கு இருந்த பல ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் கருத்துக்களை வழங்கினார். தினசரி ஒரு திட்டத்தை அமைத்து செயல்படுத்தல் பாடப்பொருள் சார்ந்த ஆழ்ந்த புரிதல் மட்டுமே வாழ்க்கைக்கு கை கொடுக்கும் என்பதையும் தேவையற்ற விளையாட்டுகள் அல்லது செயல்பாடுகளுக்கு நேரம் வீணாக அனுமதிக்காதீர்கள். தவறுகளை திருத்தி, இனி தவறுகளை மீண்டும் செய்யாததற்கான திட்டங்களை வகையீடுங்கள். தேர்வுகளில் தோல்வி அல்லது குறைவான மதிப்பெண்களை எதிர்கொள்ளும்போது, அதனை எதிர்கொள்ளும் மனப்பாங்குடன் இருக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள். போன்ற அறிவுரைகளை பகிர்ந்தார். முதன்மை கல்வி அலுவலர் எல்.ரெஜினி தொலை நோக்கு, உழைப்பு, நீண்ட கால அடிப்படையில் பயனளிக்கும் பழக்கங்களைக் கட்டியெழுப்புங்கள் என மாணவர்களின் கேள்விகளுக்கு அறிவுரை பகிர்ந்தார்.

சங்கரன்கோவில் கோட்டாட்சியர் செல்வி. கவிதா தொடர்ந்து உடற்பயிற்சிகளைச் செய்யவும், இது உங்கள் மனதையும் உடலையும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும். கல்விக்கு இது மிகவும் அவசியம் என்பதை தன்னுடைய முன்னேற்ற பாதை அனுபவங்களுடன் எடுத்துரைத்தார். 3 மணி நேரம் நடைபெற்ற இந்த கலந்துரையாடல் மூலம் மாணவர்கள் தாங்கள் பெற்ற ஊக்கத்தையும் நன்மதிப்புகளையும் உத்வேகத்தையும் நிகழ்ச்சியின் இறுதியில் பகிர்ந்துகொண்டனர். மாணவர்களுக்கு முன்னேற்றம் அடைவதற்கான நட்பு ரீதியான கலந்துரையாடலாக இந்த நிகழ்ச்சி அமைந்தது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச் சந்திரன். முதன்மை கல்வி அலுவலர் எல்.ரெஜினி, சங்கரன்கோவில் கோட்டாட்சியர் செல்வி. கவிதா மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி மாணவமாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## சங்கரன்கோவில் கோமதி அம்மாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முழுநேர கிளை நூலக புதிய கட்டிடத்தினை திறந்த வைத்த அமைச்சர்



தென்காசி டிச.24

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்மாள் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளிவளாகத்தில் முழுநேர கிளை நூலகபுதியகட்டிடத்தினை (டிச22) மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வாசுதேவநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலைக் குமார் ஆகியோர் முன்னிலையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ் விஜயன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில், தென்காசி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் 20222023 மேம்பாட்டுத்திட்டம் நிதி ரூ30 இலட்சமும், சங்கரன்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் 20222023 மேம்பாட்டுத்திட்டம் நிதி ரூ,20 இலட்சம் என மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் முழுநேர கிளை நூலக புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நூலகம் இப்பகுதியில் உள்ள மாணவ, மாணவியர்களின் வாசிப்பினை ஊக்கப்படுத்தவும், போட்டித்தேர்வுக்கு பயன்படும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மத்திய அரசுத் தேர்வுகளுக்கு தயாராகும் வகையிலான புத்தகங்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களும் மாணவ, மாணவியர்களுக்கு பயன்படும் வகையிலான அனைத்து புத்தகங்களும் உள்ளன. எனவே, போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நூலகத்தை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் (தென்காசி) தனுஷ் எம் குமார் சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, முதன்மைக்கல்வி கல்வி அலுவலர் எல்.ரெஜினி, மாவட்ட நூலக அலுவலர் (பொ) சண்முகசுந்தரம், பாரதிவாசகர் வட்டம் கௌரவத்தலைவர் வெள்ளைச்சாமி (எ) செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறையின் ஆட்சேர்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் பல்வேறு துறைகளில் அலுவலர்கள் நியமனம்




சிவகங்கை டிச.24

சிவகங்கை மாவட்டம், அரசனூர் அருகிலுள்ள இலுப்பைக்குடியில் உள்ள இந்தோ திபெத்திய எல்லைக் காவல் துறையின் ஆட்சேர்ப்பு பயிற்சி மையத்தின் விழாவில், CRPF, CISF, ITBP, SSB, தபால் அலுவலகம், DFS, NIT, இந்திய ரயில்வே போன்ற பல்வேறு துறைகளில் புதிதாக நியமிக்கப்பட்ட 455க்கும் மேற்பட்டவர்களுக்கு பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இணை இணை அதிகாரி, எஃகு மற்றும் கனரக தொழிற்சாலைகளுக்கான மத்திய அமைச்சர் பூபதிராஜு ஸ்ரீனிவாச வர்மா வழங்கினார். ஆர்டிசி டிஐஜி அச்சல் ஷர்மா, ஐடிபிபி தலைமை விருந்தினரையும், முக்கிய பிரமுகர்களையும் வரவேற்றார். நிகழ்ச்சியை மதுரை மற்றும் சிவகங்கை மாவட்ட நிர்வாக அலுவலர்கள் பார்வையிட்டனர். வீடியோ கான்பரன்சிங் மூலம் உரையாற்றிய பாரத பிரதமர் பணிநியமனக்கடிதங்களைப் பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

அவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக அவர்கள் இங்கு இருப்பதாகவும், அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்களின் தொகுப்பிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கூட்டத்தில் உரையாற்றிய மத்திய அமைச்சர் ஸ்ரீ பூபதிராஜு ஸ்ரீனிவாச வர்மா, எஃகு மற்றும் கனரக தொழில்துறை எஃகு, புதிய நியமனம் பெற்றவர்கள் தங்கள் புதுமையான யோசனைகள் மற்றும் பங்கு தொடர்பான திறன்களுடன், தொழில்துறை, பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பணியில் பங்களிப்பார்கள் என்று கூறினார். மற்றும் தேசத்தின் சமூக வளர்ச்சி அதன் மூலம் பிரதம மந்திரியை உணர உதவுகிறது விக்சித் பாரதத்தின் பார்வையிட்டார். பிரதம அதிதியை வரவேற்று பார்வையாளர்கள் எஸ். நாட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதில் பிரதமரின் அர்ப்பணிப்பை ரோஸ்கர் மேளா எடுத்துக் காட்டுகிறது என்று டிஐஜி அச்சல் சர்மா கூறினார். தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிக்கும் அர்த்தமுள்ள வாய்ப்புகளை இளைஞர்களுக்கு வழங்குவதன் மூலம் அது அவர்களுக்கு அதிகாரமளிக்கும். இறுதியாக ஷ. சுனில் குமார், கமாண்டன்ட் (Trg) நன்றியுரையுடன் நிறைவு செய்தார்.

## தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் இரயில் நிலையம் முற்றுகை ஐந்திணை மக்கள் கட்சியினர் உள்ளிட்ட 25 பேர் கைது

தென்காசி, டிச.24



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்ட மாமேதை புட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்தும் பதவி விலக வலியுறுத்தியும், நேற்று (23.12.2024), ஐந்திணை மக்கள் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் வை. தேவதாசு தலைமையில் சங்கரன்கோவில் இரயில் நிலையத்தை முற்றுகையிட முயன்ற ஐந்திணை மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த சுமார் 25க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் பணியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம்

தேனி, டிச.24



தேனி மாவட்டம் வீரபாண்டி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் பணியாளர் சங்கம் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

மாநில தலைவர் பழனி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் இளவரி ஆண்டறிக்கை சமர்ப்பித்து சிறப்புரையாற்றினார்.மாநிலத் துணைத் தலைவர்கள் வெங்கடேசன், பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென் மண்டல செயலாளர் ராஜ்குமார் வரவேற்புரையாற்றினார். மாநில பொருளாளர் ஜெயபால் கண்மணி வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார்.மாநில செயல் தலைவர் கதிர்வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பொதுச்செயலாளர்கள் ஜீவன் மூர்த்தி, முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு நுகர்வோர் பொது வாணிப கழகத்தில் காலியாக உள்ள 1500க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட பருவகால பணியாளர்களை கொண்டு நிரப்புதல், ஊழியர்களுக்கு சாதகமாக உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்புகளை நிர்வாகம் அமல்படுத்தாதது, கொள் முதல் நிலையங்கள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு நிலையங்களில் நெல் இயக்கம் செய்த போது ஏற்பட்ட இழப்புகளை நிர்வாகம் சரி செய்தல், மண்டல வாரியாக உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்துதல் உள்ளிட்ட 15 க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு இணையான பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துதல், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் பணியாளர்கள் சங்கத்திற்கு தனி அறை ஒதுக்கீடு செய்தல்,கழக பணி விதிகள் புதுப்பித்தல் ,மேலாளர்களுக்கு முதுநிலை மேலாளர் பதவி உயர்வு வழங்குதல்,ஓய்வு பெற்றவர்கள், பணியின் போது இறந்தவர்களுக்கு உடனடியாக பண பயன்கள் வழங்குதல்,ஒப்பந்த அடிப்படையில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

## பம்மல் தெற்கு பகுதி தமிழகம் வெற்றிக் கழகம் சார்பில் கிறிஸ்துமஸ் பண்டிகை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கல்

பம்மல் டிச24



செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பம்மல் தெற்கு பகுதி தலைமை தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பம்மல் தெற்கு பகுதி தலைமை டி.எஸ்.குமார் தலைமையில் பொன்னி நகர் பகுதியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் குமார் கலந்து கொண்டு கேக்வெட்டி கிறிஸ்துமஸ் விழா உற்சாகத்துடன் கொண்டாடினர்.

இதனை தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு நல திட்ட உதவிகளும், பள்ளி மாணவர்களுக்கு செஸ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினர். முன்னதாக நடனம் பாடல் போன்ற கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

உடன் நிகழ்ச்சியை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் அறிவானந்தம் மாவட்ட பொருளாளர் விஜய் தியாகு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் டி.எஸ்.குமார், கே.ஜெகதீசன், ஏகேஆர். அருண், டி.தேவி, வி.ஜாவித் அகமத் இதில் 10வது வார்டு நிர்வாகிகள், மற்றும் மகளிர் அணியினர் உட்பட பம்மல் தெற்கு பகுதி தலைமை தமிழக வெற்றிக் கழக மாவட்ட, தொகுதி, பகுதி, வார்டு நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தாலுகா அய்யம்பட்டியில் உள்ள விவசாயிகளுக்கு பொன்னாடை போற்றி உணவுகள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளோம் இதில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி மாநில ஆலோசகர் ராமன் மாநிலத் துணை ஆலோசகர் பெஞ்சமின் மாநில மகளிர் அணி தலைவர் சுபா திருச்சி மாவட்ட தலைவர் ராஜ்குமார் திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட துணைச் செயலாளர் யாஸ்மின் மற்றும் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேலூர் நறுவி மருத்துவமனையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் நிறுவனர் தின விழா - போட்டியாளர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு

வேலூர் டிச24



வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் நறுவி மருத்துவமனையில் நடந்த நிறுவனர் தின விழாவில் நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மருத்துவமனை ஊழியர்களுக்கு இடையே பல்வேறு கலாச்சார போட்டிகள் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் நாட்டில் பசுமையை பற்றிய விழிப்புணர்வு, உலக சமத்துவம், மதங்களுக்கு இடையே சகோதரத்துவம், போதை ஒழிப்பு, உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வு பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் நறுவி நிறுவனத் தலைவர் டாக்டர். ஜி.வி.சம்பத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை நறுவீ மருத்துவமனை மனித வளத்துறை தலைவர் மேனகா வரவேற்றார். மேலும், நடத்தப்பட்ட பரத நாட்டியம், தனிநபர் மற்றும் குழு நடனங்கள், பாட்டுக்கு பாட்டு, ஆடல் பாடல், பேஷன் ஷோ, ரங்கோலி, முக ஓவியம், பானை ஓவியம், நெருப்பில்லா சமையல், குறும்படம் தயாரித்தல் உள் ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சிக்கு நறுவி மருத்துவமனை நிறுவனத் தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தலைமை வகித்து நிகழ்வையொட்டி நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி பேசுகையில் கூறியதாவது:

புவி வெப்பம் அடைதலை தடுக்கும் வகையில் ஆங்காங்கே நம்மால் முடிந்தவரை மரக்கன்றுகள் நட்டு பசுமையை உருவாக்க வேண்டும். புவி வெப்பமடைதலை தவிர்க்க அரசு பல்வேறு வழிகாட்டு முறைகளை அறிவித்துள்ளது.

அதனை நறுவி மருத்துவமனை ஊழியர்கள் செயலாக்கும் வகையில் நாம் உறுதிமொழி எடுத்துக்கொள்வோம். போதையால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவோம் என்றார். இந்நிகழ்ச்சியில் மருத்துவமனை துணைத் தலைவர் அனிதா சம்பத், செயல்

இயக்குனர் டாக்டர். பால் ஹென்றி, பொது மருத்துவத் துறை தலைவர் டாக்டர். குரியன் தாமஸ், காது மூக்கு தொண்டை பிரிவு தலைவர் டாக்டர். மேரி குரியன், நரம்பியல் துறை தலைவர் டாக்டர் சிற்றம்பலம், பொது மருத்துவ மூத்த ஆலோசகர் டாக்டர். குணசேகரன், மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். இவ் விழா இறுதியில் துணை தலைமை செவிலியர் வித்யா நன்றி உரையாற்றி விழா நிறைவு பெற்றது.

## திண்டுக்கல் மாவட்ட மைய நூலகத்தில் திருவள்ளுவர் புகைப்படக் கண்காட்சி மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்

திண்டுக்கல் டிச24



திண்டுக்கல் மாவட்ட மைய நூலகத்தில் திருவள்ளுவர் புகைப்படக் கண்காட்சி, திருக்குறள் தொடர்பாக மாணவர்களால் வரையப்பட்ட புகைப்படங்கள், திருக்குறள் விளக்க உரைகள் கண்காட்சி ஆகியவற்றை மாவட்ட ஆட்சி மொ. நா.பூங்கொடி, பொதுமக்கள் பார்வைக்கு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

அய்யன் திருவள்ளுவர் அவர்களின் 133 அடி உயர திருவுருவச் சிலை 01.01.2000 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் அதற்கான வெள்ளிவிழாவினைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, திண்டுக்கல் மாவட்ட மைய நூலகத்தில், திருவள்ளுவர் புகைப்படக் கண்காட்சி, திருக்குறள் தொடர்பாக மாணவர்களால் வரையப்பட்ட புகைப்படங்கள், திருக்குறள் விளக்க உரைகள் கண்காட்சி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கண்காட்சி தொடர்ந்து 31.12.2024 வரை நடைபெறவுள்ளது.

மேலும், 31.12.2024ஆம் தேதி வரை திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் மைய நூலக வாசகர் வட்டம் சார்பில் மாணவர்கள் மற்றும் நூலக வாசகர்களைக் கொண்டு திருக்குறள் கருத்தரங்கம், வினாடி வினா போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.5,000, இரண்டாம் பரிசாக ரூ.3,000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2,000 ரொக்கப் பரிசாக வழங்கப்படும், என மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் இரா. சரவணக்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## காரைக்குடி சுப்பிரமணியபுரம் முதல் ஏ.ஜி திருச்சபையில் கிறிஸ்மஸ் விழா

காரைக்குடி டிச24



காரைக்குடி சுப்பிரமணியபுரம் பத்தாவது வீதியில் உள்ள முதல் ஏ.ஜி திருச்சபையில் எல்லோருக்கும் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது

காரைக்குடி சுப்பிரமணியபுரத்தில் கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக காரைக்குடிஎம்எல்ஏ எஸ் மாங்குடி சங்கராபுரம் ஊராட்சி மன்ற தலைவர் தேவி மாங்குடி கலந்துகொண்டு அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து கிறிஸ்தவ மக்களின் பாதுகாவலனாக இருப்பேன் என்றும் கிறிஸ்தவ மக்களின் கோரிக்கைகளை அனைத்தையும் ஏற்று உடனே நிறைவேற்றி தருவதாக உறுதியளித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை திருச்சபையின் போதகர் மனோகரன் தனபால் ஏற்பாடு செய்திருந்தார் இதில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் அருள்ராஜ் மற்றும் திருச்சபை நிர்வாகிகளும் பொதுமக்களை சுமாரா 1000 பேர் கலந்து கொண்டனர்.

மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் ஜேபி என்ற ஜெயபிரகாஷ் ரயில்வே தட்சிணாமூர்த்தி ரயில்வேகிட்டுசசிகுமார் கலந்து கொண்டனர்..

## ஊராட்சிஒன்றியம்,திருப்புவனம்

ந.க.அ4/1129/2021 நாள்: 17.12.2024

**ஏலஅறிவிப்பு**

**சிவகங்கை மாவட்டம்,திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் முதிர்ந்த நிலையில் கழிவுநீக்கம் செய்யப்பட்ட ஒன்றியக் குழுதலைவர் ஈப்புஎண்:** TN 09 G 2432 **மற்றும் வட்டார வளர்ச்சி அலுலவர் கிராம ஊராட்சி ஈப்புஎண்:** TN 63 G 0388**ஐ மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டார ஊராட்சி ஈப்புஎண்:**TN 63 G 0441**ஐ தற்போதைய நிலையில் 26.12.2024 ஆம் தேதி அன்று காலை 11.30 மணியளவில், திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நிபந்தனைகளின் அடிப்படையில் பொது விடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏலம் கோர விரும்புவர்கள் ஊராட்சி ஒன்றியஅலுவலகத்தில் 26.12.2024 காலை 10.00 மணிமுதல் 11.00 மணிக்குள் உரிய முன் வைப்புத் தொகைக்கான வங்கிவரைவு செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்**

**நிபந்தனைகள்:**

1. **ஏலம் நடைபெறவுள்ள வாகனத்திற்கு பதிவுஎண் விதிமுறைகளின் படி, ஒப்படைப்பு செய்யப்பட்டு பதிவு இல்லாத வாகனமாகவே அதிகப் பட்ச ஏலம் கோருவோருக்கு ஒப்படைப்பு செய்யப்படும்.**
2. **அரசாங்க மதிப்பீட்டிற்கு மேல் ஏலம் கோரப்படாத நிலையில் உரிய விதிமுறைகளின் படிநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**
3. **ஏலம் கோரவிரும்புவர்கள் ரூ.5000/(ஐயாயிரம் மட்டும்)** * Commissioner Panchayat Union, Thiruppuvanam **என்ற பெயரில் வங்கிவரை வோலையாக முன் வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். வங்கிவரைவு சமர்ப்பித்தவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.**
4. **ஏலம் எடுத்த நபர்கள் ஏலத் தொகையினை உடன் செலுத்தவேண்டும் மேலும் ஏலத்தொகை ரூ.**18% GST **சரக்குமற்றும் சேவைவரி தொகையினை ஏலதாரர்கள் உரியஅரசுக் கணத்தில் செலுத்த வேண்டும். செலுத்த தவறும் பட்சத்தில் முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும். உரிய அரசு கணக்கில் தொகை செலுத்தியபின் ஏலதாரருக்கு அதற்குரிய ஒப்புவிப்பு சான்றிதழுடன் வாகனம் ஒப்படைக்கப்படும்**
5. **ஏலத்தை இரத்து செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு முழு உரிமை உண்டு.**
6. **ஏலம் எடுத்தவர்கள் நிர்யணம் செய்யப்பட்ட நாளில் சொந்த செலவில் வாகனத்தை எடுத்து செல்ல வேண்டும்.**
7. **வாகனம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை பார்வையிட விரும்பும் ஏலதாரர்கள் 25.12.2024ம் தேதி வரை அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலைநேரத்தில் இவ்வலுவலகத்தில் அனுமதி பெற்று பார்வையிடலாம்.**

மாலை தந்தி





அய்யன் திருவள்ளுவரின் 133அடி உயர திருவுருவச்சிலை வெள்ளி விழா பொது நூலகத்துறை சார்பில் மதுரை மாவட்ட மைய நூலகத்தில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவசிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா மாலையணிவித்து மரியாதை செய்தார்.

# மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் “செவி வழிகேட்போம் உரக்கப்பேசுவோம்” விழிப்புணர்வு நிகழ்ச்சி

மதுரை, டிச 23

மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் காது மூக்கு தொண்டை பிரிவில் “செவி வழி கேட்போம் மற்றும் உரக்கப் பேசுவோம்“ தலைப்பில் பேச்சுப் பயிற்சியின் முக்கியத்துவத்தை காக்ளியர் இம்ப்ளாண்ட் குழந்தைகளுக்கு மீண்டும் வலியுறுத்தி ஒரு நாள் விழிப்பு ணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

குறிப்பாக இம் மருத்துவ மனையில் பிறவியிலேயே காது கேளாத மற்றும் வாய் பேசாத 227 குழந்தைகளுக்கு வெற்றிகரமாக காக்ளியர் இம்ப்ளாண்ட் என்ற சிறப்பு அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். சிகிச்சை பெற்ற குழந்தைகளுக்கு தொடர் (Auditory Verbal Therapy) செவிப்புலன் வாய் மொழி சிகிச்சையின் மூலம் சிறப்பாக பேச்சுப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.





AVT â¡ø (Auditory Verbal Therapy) செவிப்புலன் வாய் மொழி சிகிச்சையின் மூலமமே காக்ளியர் இம்ப்ளாண்ட் குழந்தைகள் சிறப்பாக முடியும் என்பதனை துறைத்தலைவர் பேராசிரியர் டாக்டர். அழகு வடிவேல் M.S(ENT) திறம்பட எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் பேராசிரியர் டாக்டர் அருள் சுந்தரேஷ்குமார் MS(ENT) காக்ளியர் இம்ப்ளாண்ட் குழந்தைகளுக்கு சிறப்பு பரிசுகள் அளித்து சிறப்புரை ஆற்றினார்.

காக்ளியர் இம்ப்ளாண்ட் குழந்தைகளின் சிறப்பு கலை நிகழ்ச்சிகளும், AVT விழிப்பு ணர்வு குறு நாடகமும் நடத்தப் பட்டது.

மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காக்ளியர் இம்ப் ளாண்ட் குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் திரளாகக் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காது, மூக்கு, தொண்டை துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர். அழகுவடிவேல் M.S(ENT) மற்றும் இணைப்பேராசிரியர்கள் டாக்டர் தி.சிவசுப்ரமணியம், டாக்டர் இராஜா டாக்டர் நாகராஜ குருமூர்த்தி, டாக்டர் பிரவின் குமார், டாக்டர் வினோத் டாக்டர் முருகன், பேச்சுப்பயிற்சி நிபுணர்கள் கார்த்திகேயன், சிவக்குமார், செல்வி கோகிலா, வார்டு மேலாளர் திருமதி. நித்தியபாலா, அலுவலக பணியாளர் திரு.சந்திரன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் குமரவேல், நிலைய மருத்துவ அதிகாரிகள் டாக்டர் சரவணன், டாக்டர் முரளி தரன், DEIC மருத்துவர் செந்தில் குமார் மற்றும் மதுரை மாவட்ட ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஆயக்குடியில் புதிய பள்ளி கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சி

பழனி டிச24

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த புது ஆயக்குடி 14வது வார்டு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தை ஒன்றிய செயலாளர் சுவாமி நாதன் வட்டார கல்வி அலுவலர் ரமேஷ் குமார், கவுன்சிலர் பாண்டியம்மாள் மணிவண்ணன் ஆகியோர் தலைமையில் ரிப்பன் வெட்டி திறந்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து இந்நிகழ்வில் பேரூர் செயலாளர் சின்னத்துரை பேரூராட்சி தலைவர் மேனகா ஆனந்தன் வார்டு செயலாளர் சிவசாமி ஆகியோர் முன்னிலையில் விழா நிகழ்ச்சி நடை பெற்றன..

மேலும் பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினர். தொடர்ந்து இந் நிகழ்வில் பள்ளி தலைமை யாசிரியர் ஆசிரியர்கள் பெற்



றோர்கள் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் குழந்தைகள் என அனைவரும் கலந்து கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன..

# சிவகங்கை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 15 பயனாளிகளுக்கு ரூ.04.95 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவி வழங்கல்

சிவகங்கை டிச.24

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டு மனைப்பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதியமின்னணு குடும்பட் அட்டை போன்ற பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 407 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் அறிவுறுத்தினார்.

மேலும், இக்கூட்டத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா நல வாரியங்களின் கீழ் 08 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை, சாலை விபத்துமற்றும் இயற்கை மரண நிவாரணத் தொகை என மொத்தம் ரூ.4,50,000/ மதிப்பீட்டிலும், பால் வளத்துறையின் சார்பில் தரமான பால் உற்பத்தியை ஊக்குவித்திடும் பொருட்டு சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சங்க செயலாளர்கள் மற்றும்



தொகுப்பு பால் குளிர்விப்பு மைய செயலாளர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்ற துறை ரீதியான அறிவிப் பின்படி, சிறந்த பால் உற்பத்தியாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட முறையூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினருக்கு முதல் பரிசாக ரூ.10,000/ மும், படமாத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பி னருக்கு இரண்டாம் பரிசாக ரூ.5,000/ மும், சிறந்த பால் உற்பத்தியாளர் சங்க செயலர்களாக தேர்ந்தெடுக் கப்பட்ட கூட்டுறவுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினருக்கு முதல் பரிசாக ரூ.10,000/ மும்,

படமாத்தூர் பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்க உறுப் பினருக்கு இரண்டாம் பரிசாக ரூ.5,000/மும், அதேபோன்று சிறந்த தொகுப்பு பால் குளிர் விப்பு மைய செயலாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டாங்கி பட்டி தொகுப்பு மைய செயலா ளருக்கு முதல் பரிசாக ரூ.10,000/மும், பருத்திகண்மாய் தொகுப்பு மைய செயலாளருக்கு இரண்டாம் பரிசாக ரூ.5,000/மும் ஊக்கதொகையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் சிவகங்கை மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் 2யினை 202425 ஆம் ஆண்டில் துவங்குவதற்கு அரசாணை வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து சிவகங்கை மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் 2க்கான சான்று என மொத்தம் 15 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.4,95,000/ மதிப்பீட் டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக, நபார்டு வங்கியின் சார்பில் திருநங்கைகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவிடும் பொருட்டு, நடமாடும் உணவு வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் கொடியசைத்து துவக்கி வைத்தார். நபார்டு வங்கியின் சார்பில், விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கென பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக மேற்கண்டவாறு, திருநங்கைகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு அடிப்படையாக தேவகோட்டை ரஸ்தா பகுதி களில் வசித்து வரும் 30 திரு நங்கைகளை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு உணவு தயாரிக் கும் பயிற்சியினை உமன் தொண்டு நிறுவனத்தின் மூலம் அளிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து, அத்தொழிலை முறையாக செய்து பயன்பெறும் வகையில், நபார்டு வங்கியின் சார்பில் நடமாடும் உணவு வாகனம் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உணவக வாகனமானது காரைக்குடி பகுதியில் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வா றாக பயன்பெற்று வரும் திரு நங்கைகளை எடுத்துக் காட்டாக கொண்டு மற்ற திருநங்கைகளும் சிறு தொழில் புரிந்து பயன்பெறும் வகையில், இவ்வுணவக வாகனமானது மாவட்ட ஆட்சியரால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத் தில் வழங்கி தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி உதவி ஆணையர் (தொழிலாளர் நலத்துறை) சதீஷ்குமார், ஆவின் பொது மேலாளர் ராஜசேகர், மாவட்ட சமூக நல அலுவலர் ரதிதேவி, மாவட்ட நபார்டு வளர்ச்சி மேலாளர் திரு.அருண்குமார், உமன் தொண்டு நிறுவனத்தின் தலைவர் ஜோதிபாலன் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருச்சிலை முன்னாள் முதல்வர் கலைஞரால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு வெள்ளிவிழாவை முன்னிட்டு மாவட்டத்தில் நடைபெற உள்ள நிகழ்ச்சியை தொடக்க நிகழ்வாக நேற்று (டிச23) கவி யோகி சுத்தானந்த பாரதி மாவட்ட மைய நூலகத்தில் பொது நூலகத்துறை இயக்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் அய்யன் திருவள்ளுவர் உருவப் படத்தினை திறந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்ட நூலக அலுவலர் திருஞான சம்பந்தம் மாவட்ட மைய நூலகர் முத்துக்குமார் நூலக கண்காணிப்பாளர் சுவாமிநாதன் வாசகர் வட்ட தலைவர் அன்புத் துறை நூலக நண்பர்கள் கிட்ட தன்னால் வர குழுவினர் ஈஸ்வரன், முத்து, கண்ணன், ரமேஷ் கண்ணன் ஆசிரியர் கண்ணப்பன் உட்பட பலர் உடன் இருந்தனர்..



சிவகங்கை மாவட்டம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நேற்று (டிச23)பார்வையிட்டு காலாண்டு ஆய்வு மேற்கொண்டார்.தேர்தல் வட்டாட்சியர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநி திகள் உடன் இருந்தனர்..

# மதுரையில் ஜல்லிக்கட்டு சிலம்பம் மற்றும் தனி திறன் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு

மதுரை, டிச.24

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகாமையில் அமைந்துள்ள தனியார் விடுதியில் தமிழ்நாடு அனைத்து வண்ணார் சமூக சங்கம் நடத்தும் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுப் போட்டிகளான ஜல்லிக்கட்டு சிலம்பம் மற்றும் தனி திறன் போட்டியில் மாநில மாவட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சமூக ஆர்வலர் பிரகாஷ் உவர்மன் புத்தக ஆசிரியர் தலைமை தாங்கினார். கணேசன் மகேஷ் லெட்சு கிருஷ்ணன் சண்முகவேல்



சிங்கன் அய்யனார் ஜெயக்குமார் இசக்கிமுத்து மணி குமரேசன் பாலா சுரேஷ் சிவா தனலட்சுமி ரவிச்செல்வி ஈஸ்வரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழச்சியில் பாரம்பரிய விளையாட்டை அரசு பாதுகாக்க வேண்டும் மூன்று முறை ஜல்லிக்கட்டு ஆன வீர விளையாட்டில் முதல் பரிசு பெற்ற பிரபாகரனை பாராட்டி விளையாட்டு வீரனை ஊக்கப் படுத்தும் விதமாக ரூபாய் 5 கோடி ரூபாய் தொகை வழங்க வேண்டும் அரசு பணியும் அத்துடன் சேர்ந்து இலவச வீடும் கட்டித் தர வேண்டும் என தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்தனர்.

# பெரியகுளத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து வி. சி.க வினர் கண்டன ஆர்ப்பாட்டம்

பெரியகுளம் டிச.24

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அரசியல் அமைப்பு சாசனத்தின் தந்தை, சட்டமாமேதை அம்பேத்கரை இழிவுபடுத்தும் விதமாக சர்ச்சைக்குரிய வகையில் பேசிய மத்திய உள் துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பொது மன்னிப்பு கேட்கக் கோரியும், மத்திய அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக பதவி விலக கோரியும். வன் கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மீது வழக்கு பதிவு செய்திட கோரியும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்திற்கு வழக்கறிஞர் சுசி தமிழ் பாண்டியன் தலைமை தாங்கினார். ஜோதிமுருகன், சையது இப்ராஹிம், பவானி



முருகன், சந்தனம், முத்துச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் ப. நாகரத்தினம் வரவேற் புரையாற்றினார். மாவட்ட செய லாளர் ஜெ.ரபீக், மண்டல செயலாளர் இரா. தமிழ் வாணன், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் மாநில பொறுப்பாளர்கள் கனிமனோகரன் கோமதி ஆனந்தராஜ் மாவட்ட அமைப் பாளர்கள் அ.மது தொல்.தளபதி இரா.சேகுவேரா கருத்தையன் தொகுதி துணைச்செயலாளர் மு.ஆண்டவர் அரசு ஊழியர் ஐக்கிய பேரவை முருகேசன் நகர துணை செயலாளர் தலித் தர்மா ஆகியோர் கண்டன உரையாற்றினர். தேனி நகர செயலாளர் ஈஸ்வரன் மாவட்ட பொறுப்பாளர்கள் காளிதாஸ், சதீஷ் மூவரசு, செளந்தர், தாரிக், அர்ஃபான் கான், வழக் கறிஞர்கள் விஜி மணிவாசகம், ரமேஷ், முருகேசன் ஒன்றிய துணை செயலாளர் இனியன் பாண்டியன், சின்னையா, இரட்டைமலை ரமேஷ், அழகுராஜா ராமகிருஷ்ணன், செல்லையா, கைலாசம் கார்த்திக், செந்தில் ரூபன் தேவா, தங்கவளவன், வீர குமார், பொன்னையா, ராம்கி, ஆனந்த் நடராஜன் மற்றும் மகளிர் விடுதலை இயக்க பொறுப்பாளர்கள் கலா, ஈஸ்வரி மற்றும் மாநில மாவட்ட நகர ஒன்றிய பேரூர் முகாம் பொறுப்பாளர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு அமித்ஷாவை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். கண்டன ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வழக்கறிஞர் காமாட்சி (எ) கரிகாலன் நன்றி கூறினார்.



செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தும்பைபட்டியில் உள்ள தியாகசீலர் கக்கனின் நினைவு நாளை முன்னிட்டு அண்ணாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா மாலையணிவித்து மரியாதை செய்தார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161